பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 23 வெள்ளிக்கிழமை 08.07.2022 கதிர் 245

இனி இது ரகசியம் அல்ல!

ஒரு மாற்றத்துக்கு–நகைச் சுவைக்கு – நேற்று நடிகர் வடிவேலுவைப் பற்றி எழுதிய இந்தப் பத்தி வாசகர் பலரின் ரசனைக்கு உள்ளாகி இருக்கின்றது. குறைந்தது பத்துத் தொலைபேசி அழைப்புகளாவது அதனைப் பற்றி சிலாகித்து வந்தது. அடிக்கடி ☞2

## கோட்டா உடன் வீட்டுக்குப் போ நாளை நாடெங்கும் போராட்டம்

### எதிரணியினர், காலிமுகப் போராளிகள் இணக்கப்பாடு என்கிறார் மனோ எம்.பி.



கோட்டா உடன் வீட்டுக்குப் போ என்றகோஷத்துடன்நாளைகொழும்பில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி நகர்வது, சுற்றிவளைப்பது மற்றும் நாடெங்கும் தமது ஊர்களில் தெருக்களுக்கு வந்து அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என எதிர்க்கட்சிகள், காலிமுகப் போராளிகள், சிவில் சமூகத்தினர் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ☞4

## சஜித் – ரெலோ சந்திப்பு



எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான ரெலோவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் ☞4

## தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும்

# கோட்டா அரசை விரட்டியடிக்க ஓரணியில் போராட வேண்டும்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறைகூவல்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவர் தலைமையிலான அரசையும் பதவியிலிருந்து அகற்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஓரணியில் திரண்டு தொடர்ந்து போராட வேண்டும். இந்த அரசுக்கு எதிராக நாடெங்கும் நாளை நடைபெறும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். ☞2

### போராட்டத்துக்குத் தடை கோரும்

## பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிப்பு



எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா நிராகரித்துள்ளார்.

இன்றும் (08) நாளையும் (09) ☞2

### யாழ்.மாவட்டத்தில்

## வெதுப்பக உற்பத்திகள் இடைநிறுத்தப்படுமா?



(இ.கலையமுதன்)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளைத் தொடர்ந்தும் எம்மால் உற்பத்தி செய்ய முடியாத நிலை ☞2

## முடிவுக்கு வந்தது காரைநகர் வீதி மறியல்; வழமைக்குத் திரும்பியது போக்குவரத்து!



யாழ்., காரைநகரில் இடம்பெற்ற வீதி மறிப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் முடிவுக்கு வந்துள்ளது. வாகனங்களின் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திரும்பியுள்ளன. ☞2

## நாட்டிலிருந்து வெளியேறும் வைத்தியர்கள்




நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்களின் ☞2

## கோட்டாவின் மடத்தனமான முடிவால் நாடே நாசம்

### சபையில் ஜனா எம்.பி. ஆவேசம்



கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த காலத்தில் எடுத்த மடத்தனமான முடிவுகளால் நாடு மோசமடைந்து நாசமடைந்திருக்கின்றது. எனவே, இந்நாட்டின் நிலையைக் கருத்தில்கொண்டு அவர் பதவி விலகிச் செல்ல வேண்டும்.

– இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வலியுறுத்தினார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படியும் எழுதுங்கள் என்று வற்புறுத்தல் வேறு. அதனால் இன்றும் அதே போன்ற ஒரு சம்பவத்தை வடிவேலுவுடன் தொட்டு எழுதலாம் என்று நினைக்கிறேன்.

டீக்கடைக்குப்போய் டீஓடர் கொடுக்கும் வடிவேலு "கடை போர்ட்டைப் புதுசா எழுதுகிறாய். ஆனால் போன வருஷம் வாங்கின டீத்தூளை மாற்ற மாட்டாயா?" - என்று கடைக்காரரைச் சீண்டுவார். அவருக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்து வந்து விடும்.

"ஏய்.... மாட்டின் துணியைத் தூக்கிப் பார்த்த மூதேவி... டீக்குள் எச்சி துப்பி கொடுத்து விடுவேன்!" - என்று வடிவேலை வைவார்.

அந்த நேரம் பார்த்து மரத்தில் இருக்கும் காகம் வடிவேலுவின் சட்டையில் எச்சம் போட்டு விடும். அதைக் கண்டு சீற்றமுறும் வடிவேலுவின் அசிஸ்டண்ட் 'ஆயி போன காக்கையை ஒரு கை பார்க்கிறேன்' என்று அதை நோக்கி கல்லெறிய, அது கீழே விழும் போது வடிவேலுவின் மண்டையைப் பதம் பார்க்கும். சிவப்பாக இரத்தம் பீறிட, அதை மேலே போர்ட்டுக்குப் பெயின்ட் அடித்துக் கொண்டிருக்கும் பெயின்டர் வேண்டுமென்றே வடிவேலுவின் மீது ஊற்றிய சிவப்பு பெயின்ட் என்று கருதும் வடிவேலுவின் அசிஸ்டண்ட், அவரை பெயின்டுடன் ஏணியோடு சேர்த்து இழுத்து விழுத்துவார். அவ்வளவுதான். களேபரம் தொடங்கும்.

தமது அசிஸ்டண்ட் மீது கோபப்பட்டு அவரை நோக்கி வடிவேல் கல் ஒன்றை எறிய, அந்தக் கல் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவரின் மண்டையை பதம் பார்க்க, அவர் கோபத்தில் சைக்கிளைத் தூக்கி வடிவேல் மீது சுழற்றி எறிய, அது கடைக்குள் விழுந்து ஸ்டவ்வில் பட்டு கடைக்குள் தீப் பற்றி கொள்ளும். வெளியே வந்து விழுந்த கடைக்காரர் கடைக்குள் தீப்பற்றுவதை கண்டு தீயை அணைக்க தண்ணீர் கானில் இருக்கும் தண்ணீரை ஊற்றும்படி கத்துவார். இருப்பது தண்ணீர்க் கான் என்று நினைத்து கெரஸின் (மண்ணெண்ணெய்) கானை தூக்கி வடிவேல் எறிய முழுக்கடையும் வெடித்துத் தீப்பிழம்பாகிவிடும். அந்த அதிர்ச்சியில் ஓடிப் போய் மறைவில் நின்று வடிவேல் புலம்புவார்.

'அடப்படுபாவிகளா.... ஒரு காக்கா இந்த துணூண்டு ஆயி போனமைக்கா இவ்வளவு பெரிய கலவரமாடா.... ? கொஞ்ச நேரத்தில் டீக்கடையை தீக்கடையாக்கி ஊரையே போர்க் களமாகிட்டாங்களே...!' என்று புலம்புவார் வடிவேலு.

சரி. இது போன்ற விவகாரம் இப்போது இங்கு நிஜத்திலும் நிகழ்ந்திருக்கிறது. எங்கு தெரியுமா?

இச்சம்பவம் ஓட்டமாவடி - 01, சீனிப் போடியார் வீதியிலுள்ள வீடொன்றிலே கடந்த செவ்வாய்க்கிழமை காலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டு முன்றிலில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்த பெட்ரோலைத் திருடன் ஒருவன் திருடும் போது, வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்காக சிகரெட் லைட்டரைப் பயன்படுத்திய போது, மோட்டார் சைக்கிள் தீப்பற்றியுள்ளது. வீட்டின் கூரை மற்றும் கதவு, ஜன்னல்களும் தீப்பற்றி எரிந்துள்ளன.

மோட்டார் சைக்கிள் தீப்பற்றிய போது திருடன் அதனை அணைப்பதற்காக (வடிவேல் பாணியில்) தண்ணீர் என்று நினைத்து வாளியொன்றிலிருந்த பெயின்ட் பூசும் ரின்னரை மோட்டார் சைக்கிளில் ஊற்றிய போது மோட்டார் சைக்கிள் வேகமாகத் தீப்பற்றியுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு தீப்பற்றிய போது "மோட்டார் சைக்கிள் எரிகிறது! எழும்புங்கோ!" - என்று கூக்குரல் ஒன்று கேட்டதாகவும், தாம் எழுந்து வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

அரைகுறையாக எரிந்த நிலையில் காட்சி தருகிறது மோட்டார் சைக்கிள்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சரி. அந்த விடியும் நேரத்தில் "மோட்டார் சைக்கிள் எரிகின்றது; எழும்புங்கோ..!' என்று சத்தமிட்டு வீட்டுகாரரை 'அலேர்ட்' செய்தவர் யாராக இருக்கும்?

எரியும் நெருப்பில் மண்ணெண்ணெய்க் கானைத் தூக்கி வீசி, ரணகளம் பண்ணிய பிறகு "எல்லோரும் ஓடித் தப்புங்கள்!" என்று கூக்குரலிட்ட வடிவேல் மாதிரி, இங்கும் எரியும் மோட்டார் சைக்கிள் மீது ரின்னர் கானைத் தூக்கி வீசிய திருடன்தான் அந்த வேலையைச் செய்திருப்பான்.

- மின்னல் -

## வெதுப்பக உற்பத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே வெதுப்பக உரிமையாளர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இயற்கை அனர்த்தங்கள் உருவாகும் போது எமது உதவியை மாவட்ட செயலகத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஆனால், தற்போது எம்மைக் கைவிட்டுள்ளனர். எமக்கு டீசலைப் பெற்றுத் தரக்கோரி பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதற்கு யாரும் செவிசாய்க்கவில்லை. இந்நிலையில், தொடர்ந்து நம்மால் வெதுப்பக உற்பத்திகளை செய்ய முடியாது. கறுப்புச் சந்தையில் டீசலைப் பெற்று மக்களுக்கு வெதுப்பக உற்பத்திகளை வழங்க முடியாது.

இறுதியாக நாம் டீசலைப் பெற்றுத் தரக்கோரி இராணுவத்தினரின் உதவியை நாடவிருக்கின்றோம் - என்றார்.

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு - கோட்டையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் எதிர்ப்பில் ஈடுபடுவோர் பிரவேசிக்கத் தடை விதிக்குமாறு கோரி பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்வைத்த இந்தக் கோரிக்கையை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதிவான் அதனை நிராகரித்துள்ளார்.

குற்றச் செயல் இடம்பெற்றால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரங்கள் உள்ளதால் குறித்த கோரிக்கையை நிராகரிப்பதாக நீதிவான் அறிவித்துள்ளார்.

## நாட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை காணப்படுகின்றது என அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் சுகாதார சேவைக்குக் கடுமையான அழுத்தங்கள் ஏற்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

## கோட்டா அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டா உடன் வீட்டுக்குப் போ என்ற கோஷத்துடன் நாளை கொழும்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் அரசுக்கு எதிராக நடைபெறும் மக்கள் போராட்டத்துக்குச் சஜித் பிரேமதாஸ எம்.பி. தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகிய எதிர்க்கட்சிகள் முழு ஆதரவை வழங்கியுள்ளன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்களும் எதிர்க்கட்சிதானே. நாங்கள் அரச ஆதரவுக் கட்சி இல்லையே. நாங்களும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவே இருக்கின்றோம். ஆனபடியால் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுதான் எங்களுடைய நிலைப்பாடும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நாட்டுக்கோ - மக்களுக்கோ - தமிழ் மக்களுக்கோ - சிறுபான்மை இன மக்களுக்கோ எவ்வித மான நன்மையையும் செய்யவில்லை. மக்களுக்கு நன்மைகளைச் செய்ய இந்த அரசு முயற்சிக்கவும் இல்லை.

பொருளாதாரப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் தொடர்கின்றது. நாட்டின் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும் வரை அதாவது தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படாது.

எனவே, எதையும் செய்ய முடியாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவர் தலைமையிலான அரசையும் பதவியிலிருந்து அகற்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அனைவரும் ஓரணியில் திரண்டு தொடர்ந்து போராட வேண்டும்.

இந்த அரசுக்கு எதிராக நாடெங்கும் நாளை நடைபெறும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது - என்றார்.

## முடிவுக்கு வந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுடன் பிரதேச செயலகம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கலந்துரையாடி, வரிசையில் உள்ள வாகனங்களின் இலக்கங்களைப் பதிவு செய்து பம்பி திருத்தப்பட்ட பின்னர் உரிய ஒழுங்கின் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

பின்னணி

காரைநகர் - வலந்தலை சந்தியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் பொறுமை இழந்து நேற்றுமுன்தினமும் நேற்றும் வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த சில நாட்களாகப் பெற்றோலுக்காகக் பொதுமக்கள் காத்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்திருந்தது.

சில மணி நேரம் எரிபொருளை விநியோகித்த நிலையில் திடீரென விநியோகப் பம்பி பழுதடைந்து விட்டது எனக் கூறி எரிபொருள் விநியோகத்தை நிறுத்தினர்.

அதனால் ஆத்திரமுற்ற மக்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், பழுதடைந்த எரிபொருள் விநியோகப் பம்பியைத் திருத்துவதற்காக அநுராதபுரத்தில் இருந்து வர வேண்டிய பணியாளர்கள் இதுவரை அங்கிருந்து புறப்படவில்லை, அவர்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன, வந்து பம்பி திருத்தப்பட்டவுடன் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

24 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் பம்பியைத் திருத்தி எரிபொருள் விநியோகிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டிய மக்கள் நேற்றும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால் காரைநகருக்கும் வெளி இடங்களுக்குமான போக்குவரத்துக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலையே, பிரதேச செயலரின் உறுதி மொழியை அடுத்து நேற்றுப் பிற்பகல் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

# தலைவர் பதவியை இராஜிநாமா செய்த பிரிட்டன் பிரதமர்



பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன், கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார் என்று நேற்று அறிவித்துள்ளார்.

பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கும் அவரின் அரசுக்கும் எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதன்படி கட்சித் தலைவர் பதவியில் இருந்து தான் விலகியுள்ளார் என்றும், புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பிரதமர் பதவியில் இருந்தும் விலகவுள்ளார் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## கோட்டாவின் மடத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதுள்ள சூழ்நிலை எல்லோருக்கும் தெரியும். இலங்கை என்பதற்குப் பதிலாக எதுவுமே இல்லாத இலங்கை என்று பெயர் சூட்டக்கூடிய நிலையில் நாடு இருக்கின்றது. பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, எரிவாயு இல்லை, மின்சாரம் இல்லை. அத்தியாவசியப் பொருட்கள் எதுவுமே இல்லை. ஊரடங்குச் சட்டம் போன்று வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன. அதேபோல் 40 வருடங்களுக்கு முன்பு சைக்கிள்களைக் கண்டவர்கள் பழைய சைக்கிள்களைத் திருத்தி வீதிகளில் செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## குழப்ப முயல்வர், கவனம்!

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் கோட்டாபயவுக்கும், பொது தேர்தல் மூலம் பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி) அரசுக்கும் அதிகாரத்தில் ஏறுவதற்கான ஆணையை வழங்கிய மக்கள், இந்த இரண்டு தரப்பினதும் கையாலாகத்தனத்தைக் கண்டு அந்த ஆணையை மீளப் பெற எத்தனிக்கின்றனர்.

சட்டப்படி ஐந்து ஆண்டு காலத்துக்கு வழங்கப்பட்ட ஆணை அது.

ஆக, நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட ஐந்து வருட ஆணையை நாடாளுமன்றம் தானாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைத் தீர்மானத்தினால் கோரினாலே ஒழிய, அதன் பதவிக் காலத்தின் முதல் இரண்டரை வருடங்களில் அது விடயத்தில் மக்கள் ஆணையை செல்லுபடியற்றதாக்கவே முடியாது.

எனினும், அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தின் படி, அந்த அரசின் பதவிக்காலம் முதல் இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர், எந்தச் சமயத்திலும் ஜனாதிபதி நினைத்தால் அந்த மக்களாணையை முடிவுறுத்த முடியும். அதன்படி கூட, தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை அடுத்த பெப்ரவரி மாதம் வரை சட்ட ரீதியாக அசைக்க முடியாது என்பதுதான் நிலைமை. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த ஆணையை இடைநடுவில் விலக்குவதற்கு சட்டரீதியாக வசதிகள், வாய்ப்புகள், வழிகள் மிகக் குறைவு.

அந்தச் சட்ட நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்கள ஆதரவை – செல்வாக்கை – ஆணையை – இழந்துவிட்ட ஜனாதிபதி கோட்டாபயவும் அவரின் அரசும் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருந்து, நாடு தொடர்பான தமது அழிவு நடவடிக்கைப் போக்கைத் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

தார்மீக ரீதியில் மக்கள் ஆணையை இழந்து விட்ட தரப்புகள், அது, சட்டரீதியாகத் தங்களுக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்வதால், உண்மையை அம்பலப்படுத்த ஜனநாயக வழியில் வேறு பல எழுச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் பொதுமக்கள் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஜனாதிபதியையும் அவரது அரசையும் வீட்டுக்குத் துரத்தும் எழுச்சிப் போராட்டத்தை நாளை நடத்துவதன் நோக்கம் அதுதான்.

இந்த ஆட்சி நிர்வாகத்தின் குளறுபடிகள், மக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புகள், எரிபொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, பணவீக்கம், மின்வெட்டு, முடங்கல் என்று மக்கள் எரிச்சலின் – சீற்றத்தின் – உச்சத்தில் இருக்கின்றார்கள்.

இதற்கு மேலும் தாங்க முடியாது, பொறுத்தது போதும், பொங்கி எழு என்ற கட்டத்துக்கு நாடும் மக்களும் எதிர்க்கட்சிகளும் வந்துவிட்டன.

அவர்களின் அந்தச் சீற்றத்துக்கான ஒன்றுபட்ட எழுச்சியின் வெளிப்பாடுதான் நாளை தலைநகரிலும் பிற இடங்களிலும் ஐக்கியமாக எதிர்கட்சிகளினால் முன்னெடுக்கப்பட இருக்கின்ற எதிர்ப்புப் போராட்டமாகும்.

எத்தனை மணிக்கு, எவ்வாறு இந்தப் போராட்டம் கட்டவிழும் என்ற முழு விவரமும் இந்தப் பத்தி எழுதப்படும் சமயத்தில் வெளியாகா விட்டாலும், இது ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து வெளியேற்றத் தூண்டும் விதத்தில் கிடுகிடுக்க வைக்கும் ஒன்றாக அமையும் என எதிர்பார்க்கலாம். இத்தகைய போராட்டங்களை – மக்களின் ஜனநாயக எழுச்சியை – வன்முறை வழிக்குத் தூண்டுவதன் மூலம் அதனைக் குழப்பி விட ஆளும் தரப்பு கங்கணம் கட்டி நிற்கும். அதற்கான விடயங்களும் கட்டவிழ்கின்றன எனப் பேசப்படுகின்றது. நேரத்துடன் பாதுகாப்பாக, முன்னெச்சரிக்கையாக செயல்படுவது எதிர்க்கட்சிகளின் கடமை. பொறுப்பு.

# 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தகவல்

நாடு நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள போதும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

அதற்காக வணிக கூட்டுத்தாபனத்தின் மூலம் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வர்த்தக அமைச்சு தீர்மானம் தொடர்பாக சபையில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடளாவிய ரீதியில் உள்ள 444 ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்காக வணிகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் பெருமளவு அத்தியாவசியப் பொருள்கள் நாட்டுக்குக் கிடைக்க இருக்கின்றன.

உலக வங்கி மற்றும், உலக உணவுத் திட்டம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம் இந்தியாவில் சீனி, கோதுமை மா ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும் சீனி மற்றும் கோதுமை மாவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு சாத்தியமாக நிறைவடைந்துள்ளது.

இந்திய அரசாங்கம் 18 கோடி அமெரிக்கன் டொலர் பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை இலங்கைக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதுடன் அந்த அத்தியாவசியப் பொருள்கள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் நாட்டுக்குக் கிடைக்கும். அத்தியாவசியப் பொருள்களை பொது மக்களுக்குத் தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் அரச மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத் திட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முக்கிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து உணவுப் பொருள்களையும் கேள்விகோரல் மூலம் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அதற்கிணங்க முக்கியமாகப் பதினைந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து குறைந்த விலையில் நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை அத்தியாவசிய உணவுப் பொருள்களை அதிகமாகச் சேகரித்து வைப்போர் மற்றும் பதுக்குவோர் தொடர்பில் விசேட சட்டங்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் சட்டமா அதிபருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. – என்றார்.

# உயர்நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வருகிறது இலங்கையின் நிதி முறைகேடுகள் குறித்த வழக்கு!

நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் தவறான முகாமைக்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், ஜூலை 27 ஆம் திகதியன்று உயர்நீதிமன்றின் முழுமை அமர்வின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இலங்கையின் நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் மற்றும் ஜெஹான் கனக ரெட்னா உட்பட்ட மூன்று பல்கலைக்கழக கல்வியாளர்கள் இந்தமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தநிலையில் மனுக்களை புதன் கிழமை அழைத்த, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய, நீதியரசர் யசந்த கோதாகொட ஆகியோர் அவற்றை ஜவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஜூலை 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கலாநிதி அதுலசிறி குமார சமரகோன், கல்வியியலாளர்களான சூசையப்பு நெவிஸ் மொரைஸ் மற்றும் கலாநிதி மஹிம் மெண்டிஸ் ஆகியோர் தமது மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யூ. டி.லக்ஷ்மன் மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல உள்ளிட்ட 39 பேரின் பெயர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதன்பின்னர்வரிகுறைக்கப்பட்டமையே நாட்டின் பொருளாதாரத்தின் இன்றைய அவல நிலைக்கு முக்கிய காரணம் என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வரிக் குறைப்பால், நாடு மிகப் பெரிய மற்றும் வரலாறு காணாத பொருளாதாரச் சேதத்தை சந்தித்துள்ளதாகவும், குடிமக்கள் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் எனவும், தீவிர பணவீக்கத்தால் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உச்சக்கட்ட விகிதத்தில் அதிகரித்து வருகின்றன எனவும் மனுதாரர்கள் தெரிவித்தனர்.

---

### கோட்டா உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிரணி கட்சிகள் சார்பில் கலந்துகொண்ட மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது:–

நாடெங்கும் நாளை 9ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள முழு அடைப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையாக பங்கு பெறும். இதன்படி மலையகத் தோட்டங்களில் அன்றைய தினம் பணிகளில் ஈடுபடாமல், அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தோட்ட வதிவாளர்களைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம்.

அதேபோல் கொழும்பு உட்பட நகரங்களில் வர்த்தக நிலையங்களையும், அலுவலகங்களையும் மூடி, முழுமையாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படியும், தமது வேலைத்தள பணியாளர்களையும் அரச எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொள்ள இடமளிக்கும்படியும் அனைத்துத் தரப்பினரையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம் – என்றார்.

---

### சஜித் - ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் புத்திக பத்திரண ஆகியோரும், ரெலோ சார்வில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாட்டில் எழுந்திருக்கும் தற்போதைய கடுமையான பொருளாதாரச் சிக்கல், அரசியல் சூழ்நிலை, அரசியல் மாற்றத்துக்கான முயற்சிகள், தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள், அரசமைப்பு விடயங்கள், நாட்டின் நிரந்தர மீட்சிக்கு அரசியல் தீர்வின் முக்கியத்துவம், தொல்லியல் நடவடிக்கைகளால் ஏற்படும் இன முரண்பாடு என முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

# நுளம்புகள் டெங்கு வைரஸைப் பரப்புவதை பெண் நுளம்புகள் மூலமே அடக்கத் திட்டம்

## நான்கு ஆண்டுகால ஆராய்ச்சி வெற்றியாம்





டெங்கு மற்றும் சிக்குன்குனியா வைரஸுகளைப் பரப்பும் நுளம்புகள், அந்த வைரஸ்களைப் பரப்பாமல் தடுப்பதற்கு பெண் நுளம்புகளைப் பயன்படுத்தும் மருத்துவ விஞ்ஞான முறை ஒன்றை தமிழகத்தில் உருவாக்கி உள்ளனர்.

நான்கு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து இதற்கான அரிய வகை நுளம்புகளை ஆய்வாளர்கள் உற்பத்தி செய்துள்ளனர்.

இதன் ஆராய்ச்சி முடிவுகளை விரைவில் வெளியிட இந்திய ஆராய்ச்சி மையம் முடிவு செய்துள்ளது. புதுவை கோரிமேட்டில் இந்திய மத்திய அரசின் பூச்சியியல் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு டெங்கு, சிக்குன்குனியாவை தடுக்கும் வகையில் வைரஸ் இல்லா நுளம்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆண் வகை நுளம்புகளுடன் புதிய வகை பெண் நுளம்புகள் இணையும் போது வைரஸ் இருக்காது. டெங்கு மற்றும் சிக்குன்குனியாவை தடுக்கும் வகையில் இந்த பெண் நுளம்புகளை உருவாக்கியுள்ளனர். இதற்கு வல்வாசியா எனப் பெயரிடப்பட்டுள்ளது.

“டெங்கு மற்றும் சிக்குன்குனியா நுளம்புகளுக்கு எதிராக பெண் நுளம்புகளை உருவாக்கி உள்ளோம். அரசாங்க ஒப்புதல்கள் இன்னும் நிலுவையில் உள்ளன என்பதால் நுளம்புகளை வெளியிடுவதில் தாமதமாகிறது. டெங்கு மற்றும் சிக்குன்குனியாவைக் கட்டுப்படுத்த ஐ.சி.எம்.ஆர். – வெக்டார் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையம் சார்பில் சிறப்பு பெண் நுளம்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வொல்பாச்சியா என்கிற நைத நுளம்புகள் உற்பத்தி மீது ஆய்வு செய்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து ஐ.சி.எம்.ஆர். – வெக்டார் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மைய மருத்துவர் அஷ்வனி குமார் கூறுகையில், டெங்கு மற்றும் சிக்குன்குனியா சொசுக்களுக்கு எதிராக பெண் கொசுக்களை உருவாக்கி உள்ளோம். ஆண் கொசுக்களுடன் இனச்சேர்க்கை செய்யும் பெண் கொசுக்களை விடுவிப்போம். இது வைரஸ்கள் இல்லாத லார்வாக்களை உருவாக்கும். நாங்கள் கொசுக்கள் மற்றும் முட்டைகளை உருவாக்கியுள்ளோம். அது எப்போது வேண்டுமானாலும் வெளிவரலாம். இதற்கான ஆய்வு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு இப்போது முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க ஒப்புதல்கள் இன்னும் நிலுவையில் உள்ளன என்றார்.



# பாதுகாப்பு உட்பட்ட பல விடயங்களில் இந்தியா – மொஸம்பிக் ஒத்துழைக்கும்

## பாதுகாப்புச் சபைக்குத் தெரிவானமைக்கும் வாழ்த்து

மாபுடோ (மொஸம்பிக்)ஜுலை 08

ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மொஸம்பிக்குடன் இந்தியா தனது உறவுகளை மேலும் ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியா மற்றும் மொஸம்பிக் நாடுகள் கடந்த திங்கட்கிழமை மொஸம்பிக்கின் மாபுடோ நகரில் நடைபெற்ற இரண்டாவது சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனையின் போது அரசியல் பரிமாற்றங்கள், வளர்ச்சி கூட்டாண்மை திட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பன்முக இருதரப்பு உறவை மதிப்பாய்வு செய்தன.

இந்தியத் தரப்புக்கு கிழக்கு மற்றும் தென்னாபிரிக்கா விடயங்களுக்குப் பொறுப்பான இணைச் செயலர் புனித் ஆர். குண்டல் தலைமை தாங்கினார். மொஸம்பிக் அணிக்கு மொஸம்பிக்கின் வெளியுறவு மற்றும் ஒத்துழைப்பு அமைச்சகத்தின் ஆசியா மற்றும் ஓசியானியா இயக்குநர் இஸ்மாயில் வாலிஜி தலைமை தாங்கினார்.

ஐக்கிய நாடுகள் சபை, தென்னாபிரிக்க அபிவிருத்தி ஒத்துழைப்பு (SADC) மற்றும் ஆபிரிக்க கண்ட சுதந்திர வர்த்தகப் பகுதி (AfCFTA) உள்ளிட்ட உலகளாவிய முன்னேற்றங்கள் மற்றும் பொதுவான நலன்கள் குறித்து இரு தரப்புகளும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டன என இந்திய வெளியுறவு அமைச்சகம் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் மொஸம்பிக் தரப்பு மக்களிடையே பரிமாற்றம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்த இரு தரப்புகளும் ஒப்புக்கொண்டன.

“வெளியுறவு அதிகாரிகள் மட்டப் பேச்சுகளின் போது, இரு தரப்புகளின் பிரதிநிதிகளும் அரசியல் பரிமாற்றங்கள், வளர்ச்சி கூட்டாண்மைத் திட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் பொருளாதார விடயங்கள், தூதரகப் பிரச்சினைகள் மற்றும் விவசாயம், விளையாட்டு, சுகாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை உள்ளடக்கிய பன்முக இரு தரப்பு உறவை மதிப்பாய்வு செய்தனர்.” – இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

2023 – 24 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் நிரந்தரமற்ற உறுப்பினராக மொஸாம்பிக் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இந்தியத் தரப்பு வாழ்த்து தெரிவித்தது.

இரு தரப்பும் உயர்மட்ட அரசியல் பரிமாற்றங்கள் மற்றும் கூட்டு நிறுவன வழிமுறைகளின் வழக்கமான சந்திப்புகளைத் தொடரவும் ‘கூட்டாண்மையை துடிப்பானதாகவும் பரஸ்பரம் நன்மை பயக்கும் விதத்தில் வைத்திருக்கவும்’ ஒப்புக்கொள்ளப்பட்டது.

நட்பு மற்றும் சுமுகமான சூழ்நிலையில் பேச்சு நடைபெற்றதாக அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மபுடோவில் பரஸ்பரம் வசதியான திகதிகளில் அடுத்த கட்ட ஆலோசனையை நடத்த இரு தரப்பினரும் இணங்கினர்.

# ராமேஸ்வரத்தில் ஈழ அகதி ரயிலில் அடிபட்டு மரணம்






*தமிழகத்தின் ராமேஸ்வரத்தில் ரயிலில் அடிபட்டு இலங்கை தமிழ் அகதி ஒருவர் புதன்கிழமை காலை உயிரிழந்தார்.*

*சடலத்தைக் கைப்பற்றிய ராமேஸ்வரம் ரயில்வே பொலிஸார், இது விபத்தா அல்லது தற்கொலை முயற்சியா என விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*முருகையா என அடையாளம் காணப்பட்ட 55 வயதுடைய அந்த நபர், இலங்கையின் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்தவர்.*

*இவர் கடந்த 32 ஆண்டுகளாக இந்தியாவில் அகதியாக வாழ்ந்து வருகிறார். இலங்கை உள்நாட்டுப் போரின் உச்சக் கட்டத்தில் 1990 ஆம் ஆண்டு தமிழகம் வந்தவர்.*

*இவர் ராமநாதபுரம் மாவட்டம் ஏ.கே.எஸ். தோப்புப் பகுதியில் உள்ள மண்டபம் முகாமில் குடும்பத்துடன் தங்கி இருந்தார்.*

*ஜூலை 6, புதன்கிழமை காலை, மண்டபம் கேம்ப் ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, காலை 8.30 மணியளவில் ரயிலில் அடிபட்டார்.*

# சுற்றுலாத்துறைசார் தொழிலாளர்களுக்கு எரிபொருளைப் பெற தொலைபேசி இலக்கம்

## ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள சாரதிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு எரிபொருளைப்பெற்றுக்கொள்வதற்காக 1912 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இலக்கத்துக்கு அழைத்து சுற்றுலாத்துறைசார் தொழிலாளர்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள சாரதிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு எரிபொருளைப்பெற்றுக்கொள்வதற்காக அவசர தொலைபேசி இலக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது.

அதன் ஊடாக அவர்கள் தமக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு நாளாந்தம் சுமார் 1000 வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, சுற்றுலாத்துறை அமைச்சால் வழங்கப்படும் கடிதத்தைக் கொண்டும் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். சில சுற்றுலாத்துறைசார் ஊழியர்கள் தமது தொழில் அடையாள அட்டையை மாத்திரம் காண்பித்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முற்படுகின்றனர். இவ்வாறானவர்கள் சுற்றுலா அமைச்சின் கடிதத்தையும் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

எதிர்வரும் 10 - 12 ஆம் திகதிகளுக்குள் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு கிட்டும் என்று எண்ணுகின்றோம். அதன் பின்னர் சுற்றுலாத்துறை வழமைக்கு திரும்பும் என்று எதிர்பார்க்கின்றோம்.

அத்தோடு ஓகஸ்ட் மாதத்தில் நல்லூர் ஆலய உற்சவம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையால் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலுள்ள பெருமளவான பக்தர்கள் வரவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் மாதம் சுற்றுலா பருவ காலம் என்பதால் மேற்படி காலப்பகுதியிலும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை 8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதனை மேலும் அதிகரிப்பதே எமது இலக்காகும்.

இலங்கைக்கு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நாடுகளின் தூதுவர்களை சந்தித்து, அதனை நீக்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். அத்தோடு சுற்றுலாத்துறையை இடையூறின்றி முன்னெடுப்பதற்கு விமானங்களுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்கான நடவடிக்கை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் இணைந்து முன்னெடுக்கப்படுகிறது. - என்றார்.



# கிளிநொச்சியில் விவசாயி வைத்திருந்த எரிபொருளை கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு!

## விவசாய சம்மேளனமும் பொலிஸார் மீது கடும் கண்டனம்

(லோகதயாளன்)

கிளிநொச்சியில் விவசாயி வைத்திருந்த எரிபொருளைக் கையகப்படுத்த முயன்ற பொலிஸாரின் நடவடிக்கைக்கு கிராம மக்கள் கூடி எதிர்ப்புத் தெரிவித்தமையால் வீதியில் எரிபொருளை கைவிட்டுச் சென்ற பொலிஸார் தொடர்பில் விவசாய சம்மேளனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்தக் கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் என்னும் விவசாயி மாவட்டத்திலேயே பெயர் சொல்லக் கூடிய ஒரு சில விவசாயிகளில் அவரும் ஒருவர். அவரிடம் உள்ள சொந்த நிலம் மற்றும் குத்தகை நிலம் என 70 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலம் தற்போதும் விதைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விதைப்பதற்கு அவரது குடும்ப உறுப்பினர்களும் காரணமாக அமைகின்றனர்.

இதேநேரம் காலபோகத்தின்போது 100 ஏக்கருக்கும் அதிக நிலம் விதைப்பில் ஈடுபடும் ஒரு விவசாயக் குடும்பமாகும். அந்தக் குடும்பத்தில் இரு வெட்டு இயந்திரம், இரு உழவு இயந்திரம் என்பனவும் சொந்தமாகவே உள்ளன.

சிறுபோக அறுவடை தற்போது அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 27 ஆயிரம் ஏக்கர் விதைக்கப்பட்டுள்ளது. ஓர் ஏக்கர் அறுவடைக்கு 12 லீற்றர் முதல் 15 லீற்றர் வரையான டீசல் வேண்டும். இந்த நிலைமையில் இலங்கேஸ்வரன் விதைத்துள்ள 70 ஏக்கரை அறுவடை செய்யவே ஆயிரம் லீற்றர் டீசல் போதாது . இவை அனைத்தும் உண்மையாக இருக்கும் சூழலில் புலனாய்வாளர்கள் வழங்கிய தகவல் என்றதன் பெயரில் அவரது இல்லத்தில் இருந்த 3 பரல் டீசலை பொலிஸார் கையகப்படுத்திக் கொண்டு சென்றனர்.

இந்த தகவல் அயல் முழுக்க பரவியதாலும் இலங்கேஸ்வரனின் உண்மைத் தன்மை அறிந்தவர்கள் பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் எரிபொருளை வீதியில் விட்டுவிட்டு பொலிஸார் சென்றனர்.

அடுத்த வாரம் இடம்பெறவுள்ள அறுவடைக்கு இதுவரை எவருமே எரிபொருள் ஏற்பாடு செய்து தரவில்லை. காலபோகத்தின்போது வழங்கிய எரிபொருள் பிந்தி வழங்கியதை சேமித்து வைத்தவர்களின் எரிபொருளை பறிக்க முயலும் பொலிஸாரின் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் செயலை உரிய தரப்புக்கள் அனைவரும் தலையிட்டு உண்மையான விவசாயிகளிடம் இருந்து எரிபொருளை பறிமுதல் செய்வதைத் தடுக்க வேண்டும் என இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார். இதேவேளை இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகனின் இந்தக் கோரிக்கை தொடர்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது -

இன்று (நேற்று) மாவட்ட அரச அதிபர் பணி நிமித்தம் வெளி மாவட்டம் சென்றுள்ளதால் பதில் கடமையின் நிமித்தம் அது தொடர்பில் விவசாயிகளுடன் உரையாடினேன். அதேநேரம் எழுத்திலும் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர். எனவே மாவட்ட அரச அதிபர் பணிக்கு திரும்பியதும் அது தொடர்பான நடவடிக்கை இடம்பெறும் எனப் பதிலளித்தார்.

# கடவுச்சீட்டு வரிசையில் காத்திருந்த கர்ப்பிணித் தாய் குழந்தை பிரசவம்!

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு திணைக்களத்தில் கடவுச்சீட்டு வரிசையில் காத்திருந்த கர்ப்பிணி தாயொருவர் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை குழந்தையை பிரசவித்துள்ளார்.

கடவுச்சீட்டு பெற வந்த ஹற்றனைச் சேர்ந்த பெண்ணுக்கே இவ்வாறு குழந்தை பிறந்துள்ளது.

வரிசையில் நின்று பிரசவ வலியால் துடித்த கர்ப்பிணிப் பெண்ணைப் பார்த்த இராணுவ வீரர்கள், அவரை காசல் வைத்திய சாலையில் சேர்க்க ஏற்பாடு செய்தனர்.

அதற்குள் அவருக்கு குழந்தை பிறந்துவிட்டதாகவும் இந்த நிலையில், தாயும் கைக்குழந்தையும் நலமுடன் இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருள் நெருக்கடியினால் கடமைக்கு வராத வைத்தியர்!

## கர்ப்பிணித் தாய்மார்கள் அவதி

யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உரும்பிராய் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தில் வைத்தியர் வராதமையால் சிகிச்சைக்காக வருகை தந்த கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த புதன்கிழமை ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார்களைப் பார்வையிடும் தினமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் அங்கு 40 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் வந்து வெகு நேரமாகக் காத்திருந்த நிலையிலும் பார்வையிடுவதற்காக ஆரம்ப வைத்தியசாலையில் வைத்தியர் வரவில்லை எனக் கூறப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் கர்ப்பிணி தாய்மார்கள் ஓட்டோக்களுக்குக் பணம்கொடுத்து வைத்தியசாலைக்கு வருகை தந்தும் அங்கு வைத்தியர் இல்லாமமை தமக்கு வருத்தம் அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மேற்படி வைத்தியசாலையில் சுழற்சி முறையில் வைத்தியர் ஒருவர் பார்வையிடுகிறார் எனவும் வைத்தியர் வராதமை தொடர்பில் தான் ஆராய்கிறேன் எனவும் தெரிவித்தார்.

# 3 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெயுடன் கிளிநொச்சி நாச்சிக்குடாவில் ஒருவர் கைது!

*கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் 3 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெயுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.*

*முழங்காவில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கொள்கலன்களில் நிறைத்து வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெயே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.*

*இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய 55 வயதான ஸ்லாமியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையுடன், 3600 லீற்றர் மண்ணெண்ணெயும் மீட்கப்பட்டுள்ளது.*

*குறித்த மண்ணெண்ணெய் வெள்ளை நிறமானது எனவும், இலங்கையில் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெயிலிருந்து வேறுபட்டு காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*குறித்த மண்ணெண்ணெய் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் முழங்காவில் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.*

# வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி முடிவு!

நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை முறையே 14.50 சதவீதம் மற்றும் 15.50 சதவீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த நாணயக் கொள்கை நிலைப்பாட்டைக் கடுமையாக்குவது அவசியம் என்று கருதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# குழப்புகிறதா, கூட்டமைப்பு?

## அக்க ரை றை அலசல்



என்.சத்தியமூர்த்தி



தமிழ் அரசியல் கட்சிகளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் முகம் என்று இன்றளவும் தென்னிலங்கையில் ஒரு கருத்து உள்ளது. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது போன்ற விமர்சனத்திற்கும் குற்றச்சாட்டிற்கும் ஆளாவது வாடிக்கையாகவே இருந்து வருகிறது. கூட்டமைப்பும், தென்னிலங்கையில் இத்தகைய எண்ணவோட்டம் எங்கே மாறிவிடுமோ, என்று கருதி செயல்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

காரணம், அவ்வாறான எண்ணவோட்டம் தென்னிலங்கையில் தொடர்வது வரையில் தான், கூட்டமைப்பிற்கு வடக்கிலும், கிழக்கிலும், புலம் பெயர்ந்தோர் மத்தியிலும், சர்வதேச சமூகத்திலும், தொடர்ந்து அரசியல் செய்ய முடியும் என்ற நிலை இருப்பதாக அவர்களில் சிலரே எண்ணி செயல்படுகிறார்கள். அவ்வாறான ஒரு கருத்துத் தோன்றி, வேர் விட்டு, கன காலம் ஆகி விட்டது. ஆனால், இது தொடரும் வரை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. இது நிச்சயம்.

இது ஒரு புறம் இருக்க, அண்மையில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேய்கியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது, தன்னைச் சந்தித்த கூட்டமைப்புக் குழுவிடம் இலங்கை அரசின் செயல்பாடு குறித்து கூறியதாக கருதப்படும் கருத்து, சர்ச்சை பொருள் ஆனது. இங்கு, ஜப்பானியத் தூதுவர் அத்தகைய கருத்தைத் தெரிவித்தாரா, இல்லையா, என்பதல்ல கேள்வி.

அவ்வாறு, வெளிப்படையாக அவர் கருத்து தெரிவித்திருந்தாலும், அதனை வெளியே தம்பட்டம் அடித்தது, தவறான முன்னுதாரணத்தை, கூட்டமைப்பிலிருந்து அவரைச் சந்தித்தவர்களில் யாரோ ஒருவர் ஏற்படுத்தி விட்டார். இனி, ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் மட்டுமல்ல, கொழும்பில் உள்ள அனைத்து நாடுகளின் அதிகாரிகளும், கூட்டமைப்பையும் தாண்டி, பிற தமிழர் தரப்பினரிடமும் எச்சரிக்கையாகவே பேசுவார்கள். முடிந்த அளவிற்கு அவர்களைப் பொது வெளியில், அரசு விழாக்களில் அல்லாமல், தனியாக சந்திப்பதையே கூட தவிர்ப்பார்கள். தமிழர் தரப்பிற்கு, இது தேவையா?

### நடந்தது என்ன?

சரி, ஜப்பான் தூதுவர் கூறியதாக, கூட்டமைப்பு வெளியிட்ட கருத்துத்தான் என்ன? அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஜப்பானிய தூதுவர், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான உதவிகளை உடனடியாக செய்ய மாட்டோம், என்று கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் கூறியதாக, கொழும்பில் இருந்து வெளியாகும் ஓர் ஆங்கில தினசரி செய்தி வெளியிட்டது. தங்களது பொருளாதார உதவி சரியான விதத்தில் பயன்படுத்தப் படாது என்று கருதுவதாலேயே, ஜப்பான் இவ்வாறு முடிவு எடுத்துள்ளதாகவும், தூதுவரைமேற்கோள்காட்டி, கூட்டமைப்புத் தலைவர்கள் கூறினர் எனவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

இதன் காரணமாகவோ என்னவோ, ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்ட அதே தினம், ஜப்பானிய தூதரகத்தைச் சார்ந்த மூத்த அதிகாரி ஒருவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார். அதன் பிறகு, ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், அந்த பேச்சுவார்த்தையை குறிப்பிட்டு, ஜப்பான் தொடர்ந்து, இலங்கைக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியைத் தங்களது அதிகாரி ஒருவர் சந்தித்துப் பேசினார், என்பதைக் குறிப்பிடாமலே, அவரது அலுவலகச் செய்தியை, ஜப்பானிய தூதரகத்தின் முகநூல் பதிவு ஒன்று குறிப்பிட்டது. ஆனால், இந்த இரண்டு செய்திக் குறிப்புகளுமே, கூட்டமைப்புக் குறித்துக் குறிப்பிடவில்லை.

### சதி வலை

உண்மை எதுவாகட்டும், ஆனால், ஜப்பானிய தூதரகப் பிரச்சினையை ஏதோ ஒரு தீவிரவாத அமைப்பின் சதி வலையின் ஒரு பகுதியாகவே தென்னிலங்கை அறிவு ஜீவிகளில் சிலர் வர்ணம் பூசி வருகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை, அன்றும், இன்றும், கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் முகமூடி. அவ்வளவுதான். கூட்டமைப்பிற்கான தமிழர் தரப்பு தேர்தல் கால ஆதரவை முன்னிறுத்தினால், அவர்களை பொறுத்தவரை, விடுதலைப் புலிகள் இயக்கம், இன்றும் அரசியல் செயல்பாடுகளில் தொடர்ந்து வருகிறது. இதன் அடுத்த கட்டம், மீண்டும் தீவிரவாதம்தான். இவ்வாறான சிந்தனை, அவர்களுக்கு அன்றாட பிழைப்பு.

தென்னிலங்கையில் இந்த அறிவுஜீவிகளை பொறுத்த வரையில், கடந்த நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில், அரசுக்கு எதிராக ஒன்றல்ல, இரண்டு ஆயுத கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஜே.வி.பி. மட்டும் இன்று, அப்பாவியான, மிதவாத அரசியல் கட்சி. ஆனால், விடுதலைப் புலிகள்இயக்கத்தின்காலத்திற்குபின்னான, தற்போதைய தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம், தீவிரவாதத்தின் அடுத்த முன்னோடி.

பிரச்சினை இந்த அறிவுஜீவிகளுடன் தீர்ந்துவிடும் என்று இருந்தால், அவர்களைக் குறித்துக் கூட்டமைப்போ, பிற தமிழர் அரசியல் தலைமைகளோ கவலைப்படத் தேவையில்லை. ஆனால், இவர்களைத் தொடர்ந்து, தென்னிலங்கையில் வெகுஜன ஊடகங்கள், அவற்றில் இருந்து, அப்பாவி, சிங்கள – பௌத்த மக்கள் என்று இந்த கிருமி பரவி விடும். இவ்வாறு தானே, வடக்கிலும், கிழக்கிலும், தமிழ் மக்களை வெகுஜன ஊடகங்கள் கொம்பு சீவி வளர்த்து வந்திருக்கின்றன. அதனைத் தொடரவும் செய்கின்றன.

இந்தக் கிருமிகளின் எண்ணமே, திட்டமே, நாட்டின் தற்போதைய தோல்விகளுக்கு, பொருளாதார நிலைமைக்கு, தமிழர் தரப்பும் பொறுப்பேற்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதுதான். இதுவும் எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயமே. எப்பொழுது, பொறுப்புள்ள தமிழர் தலைவர்கள் என்று சிங்கள அரசியல்வாதிகளாலும், சமூக அமைப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இன்றளவும் மதிக்கப்படும் சம்பந்தன், சுமந்திரன் போன்ற தலைவர்கள், இனப்போரே இன்றைய பொருளாதார பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் என்ற தொனியில் கருத்துத் தெரிவித்தார்களோ, அதற்கான எதிர்வினையை தமிழர்கள் எதிர்நோக்க வேண்டியது, அடுத்த கட்டம் மட்டுமே.

இந்த மறுதலிகள் தென்னிலங்கையில், பெரிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இல்லாதது வரை, அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால், எப்பொழுதுமே, இது போன்ற குயுக்தியான கருத்துக்கள், முதலில் முகம் தெரியாக நபர்களின் கருத்துகளாகவே உருவெடுக்கும். காலப்போக்கில், அவற்றில் சில – பல கருத்துக்களை, பெரிய கட்சிகளே தங்களது கொள்கையாக மாற்றிக் கொள்ளும் சூழல் தோன்றும். அப்போதுதான், வினை பிடிக்கும்.

### ஆயுதப் புரட்சி

தற்போதைய சூழலில், தென்னிலங்கை சமூக – அரசியல் குழுக்களில், அடையாளம் தெரியாத ஏதோ ஒரு பகுதியினர், அரசுக்கு எதிராக ஆயுதப் புரட்சியை துவக்குவதற்கு நாள் குறித்து வருகின்றனர் என்பது கண்கூடு. இன்னும் சொல்லப் போனால், கடந்த மே மாதம் 9 ஆம் திகதி, மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி விலகியமையைத் தொடர்ந்து தலைநக ரில் அரங்கேறிய வன்முறைச் சம்பவங்கள் ஜுஜுபி ரகம்.

அதே தினம் மாலை, சுமார் இரண்டு மணித்தியாலங்களில், தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்தேறிய தீவைப்புச் சம்பவங்கள் அவ்வாறானதல்ல. அந்த நேரத்தில், 78 ஆளும் கட்சி தலைவர்களின் வீடுகளும், தொழிற்கூடங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. ஆளும் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், கொடூரமாகக் கொல்லப்பட்டார். அவ்வாறே, அவரது பொலிஸ் பாதுகாவலரும் கொல்லப்பட்டார். அவர்களுக்காகக் கண்ணீர் சிந்த தமிழர் உள்ளிட்ட எந்த அரசியல் தலைமைக்கும் நேரம் கிடைக்கவில்லை. மனம் இல்லை.

தற்போது, ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்று, அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து நாளை, ஜுலை 9 ஆம் திகதி புதிய போராட்டத்தை முன்னெடுக்கப்போகின்றனர் என அறிவித்துள்ளன. அதாவது, தலைநகரில் காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக, தாங்களும் அவர்களோடு இணைந்து கொள்ள இருப்பதாக செய்தி வெளியாகி உள்ளது. இதில், முக்கிய எதிர்க்கட்சியான 'ஐக்கிய மக்கள் சக்தி', கொள்கை முரண்பாடுகள் கொண்ட ஜே.வி.பி. மற்றும் கூட்டமைப்பு ஆகியவை தற்போது ஆதரவு தெரிவித்துள்ளன.

இது தவிர, எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, இதனை ஒட்டி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவர் விக்னேஸ்வரன் போன்றோரையும் சந்தித்து பேசியுள்ளார். அவர்களது பேச்சு விவரங்கள் தெரியவில்லை என்றாலும், அவர்களது கட்சிகளும் ஜுலை 9 போராட்டத்தில் கலந்து கொள்ள வாய்ப்புள்ளதாகக் கருத இடமிருக்கிறது.

### தமிழர் நிலைப்பாடு

ஜனநாயக நாட்டில், அரசுக்கு எதிரான போராட்டங்கள், எதிர்க்கட்சிகளின் உரிமை. அதே சமயம், தற்சமய பொருளாதார சூழலில், தொடரும் போராட்டங்கள், பிற நாட்டு அரசுகளுக்கும் அவர்கள் நாட்டில் உள்ள முதலீட்டாளர்களுக்கும், இந்த நாட்டின் மீதான நம்பிக்கையை வளர்க்குமா, குறைக்குமா? அவர்களது நம்பிக்கை குறையுமானால், அதன் எதிர் விளைவுகள், பக்க விளைவுகள் என்னென்ன?

இது ஒரு புறமிருக்க, அரச தலைமைக்கு எதிரான போராட்டம் என்பதையும் தாண்டி, இந்த முறை, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வன்முறை வெடிக்குமேயானால், அது குறித்து தமிழ் தலைமைகள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது, தமிழர் கட்சி தலைமைகளின் வேலையல்ல. உண்மை. ஆனால், அதன் காரணமாக எந்தவிதப் பாதிப்பும் தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த வாரம் 'கறுப்பு ஜுலை' தமிழ் இன தாக்குதல்களின் நினைவு நாள் போது, நாட்டில் தீவிரவாத தாக்குதல்கள் நடைபெற வாய்ப்பு இருப்பதாக உளவுதுறை தகவல்களை சுட்டிக்காட்டி, பொலிஸ் மாஅதிபர் மேலதிகாரிகளை எச்சரித்ததாக செய்தி வெளியானது. இது உண்மையாக இருக்கலாம், பொய்யாக இருக்கலாம். அரசுக்கு ஆதரவான கதையாகக் கூட இருக்கலாம்.

ஆனால், இதில் ஒரு சதவீதமாவது உண்மை இருந்து விட்டால், அதன் சாயல் வரும் நாள்களில் வெளிப்பட போகிறது என்றால், இதன் பின்னால் யார், என்ற விசாரணை பின்னர் நடைபெறும், கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதல்கள் குறித்தே, நாட்டின் பாதுகாப்பு அமைப்பினர் இன்னமும் முடிந்த முடிவுகளைத் தெரிவிக்கவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை வலுவிழக்கச்செய்து மேற்கொள்ளும் படுகொலைகள் எரிபொருள் வரிசைகளில் இடம்பெறுகின்ற மரணங்கள் ஆகும்!

## துஷார இந்துனில் எம்.பி. சாடல்



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தபோது நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஏதேனுமொரு சிறந்த விடயத்தைக் கூறுவார் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் அதற்காக அவர் வரவில்லை. மாறாக அரசமைப்பின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து, தனது தொழிலைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்பதே அவரது எண்ணமாக இருந்திருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி எரிபொருள் வரிசையில் இடம்பெறும் மரணங்கள் வெறும் மரணங்கள் அல்ல.

மாறாக அவர்களை நீண்டநேரம் வரிசைகளில் காத்திருக்கச்செய்து, உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் வலுவிழக்கச்செய்து மேற்கொள்ளப்படுகின்ற படுகொலைகள் ஆகும்.

இந்த மரணங்களுக்கும், இதனால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ள இழப்பீடு என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவிற்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்த வேளையில் அவர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தபோது அப்போதைய அமைச்சர் ரிச்சட் பத்திரண ஜனாதிபதி பிரேமதாஸவிற்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இருப்பினும் அந்த அசாதாரண சூழ்நிலையில்கூட ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் மிகுந்த துணிச்சலுடன் உரையாற்றிவிட்டு அங்கிருந்து சென்றார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தருவதென்பது விசேடமானதொரு விடயமாகும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறையேனும் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தரவேண்டும் என்று அரசமைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீதியில் தனியாக நடந்து சென்றாலோ அல்லது ஏதேனுமொரு எரிபொருள் நிரப்புநிலையத்துக்கு அண்மையில் இறங்கினாலோ அவருக்கு என்ன நேரும் என்பதைக் கூறமுடியாத நிலையேற்பட்டிருக்கின்றது.

இதுவரையான காலமும் நாடளாவிய ரீதியில் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களித்த மக்கள் அவருக்கெதிராக வீதிகளில் இறங்கிப் போராடியதன் மூலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். ஆனால் இப்போது நாடாளுமன்றத்திலும் அவருக்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. நிறைவேற்றதிகாரத்துக்கு எதிராக அரசமைப்பின் விரோதத்தை அவர் எப்போது புரிந்துகொள்ளப்போகின்றார்? என்று கேள்வி எழுப்பினார்.

## மக்கள் பொலிஸாரை தாக்க நேரிடலாம்!

### எச்சரிக்கிறார் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் பாரிய குற்ற அலைகள் உருவாகியுள்ளன என முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இலங்கையில் இத்தகைய நெருக்கடியைக் கையாள போதுமான பொலிஸ் அதிகாரிகள் இருந்தாலும், உயரடுக்கு பாதுகாப்பு கடமைகளுக்காகப் பலர் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளனர்.

தோற்கடிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு யுக்திகளை பயன்படுத்தி பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகள் சாதாரண மக்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தற்காப்புக்காக பொலிஸ் துறையினரை தாக்கும் வாய்ப்புகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் குடும்பஸ்தர் கொடூரமாக வெட்டிக்கொலை

மட்டக்களப்பு - சந்திவெளிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரது உறவினர்களால் நேற்றிரவு குறித்த நபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்திவெளி பிரதான வீதியைச் சேர்ந்த 38 வயதான கந்தசாமி இளையராஜா என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. குறித்த நபரைத் தாக்கியபோது காயமடைந்த மூவர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். 2 ஆண்களும், பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவரின் மனைவியின் உறவினர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டின் சொத்துக்களையும் தேசிய வளங்களையும் விற்பனை செய்வதற்கு அரசு முயற்சி என்கிறார் விமல்



நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அவசியமான தலைமைத்துவம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணாமல், அதனை மேலும் தீவிரப்படுத்தி, அதன்மூலம் நாட்டின் சொத்துக்களையும் தேசிய வளங்களையும் விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக நாட்டின் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிக்கான தீர்வுகள் தொடர்பாகத் தாம் கூட்டாக ஆராய்ந்து வருகிறோம் எனவும், அதன்மூலம்கண்டறியப்படுகின்றதீர்வுகளைஅடுத்தவாரம் வெளியிடவிருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இதிலிருந்து மீள்வதை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ளக்கூடிய தலைமைத்துவம் மிக அவசியமாகும்.

ஆனால், இப்போது அத்தகைய தலைமைத்துவம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணாமல், அதனை மேலும் தீவிரப்படுத்தி, அதன்மூலம் நாட்டின் சொத்துக்களையும் தேசிய வளங்களையும் விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாகவும், இருப்பினும் அந்தப் பாரத்தை பொது மக்கள்மீது சுமத்த முடியாது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

அவ்வாறெனில் எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைத்துத் தரப்பினரையும் பாதித்திருக்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

குறிப்பாக புதன்கிழமை அமைச்சரொருவர் பதவி விலகியிருக்கின்றார். அதற்கான காரணத்தை அடிப்படையாகக்கொண்டு நோக்கவேண்டியுள்ளது.

நாடு பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய மோசடிகளும் கொள்கைகளும் இடம்பெறுகின்றன. இதுமாத்திரமன்றி ஏற்கனவே எரிவாயு இறக்குமதி தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக இப்போது வட கடலில் இலங்கைக் கடற்படையின் பிரசன்னம் குறைவடைந்துள்ளது.

எமது மீனவர்களும் கடலுக்குச் செல்வதில்லை. அதன் விளைவாக இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பிற்குள் நுழைந்து கடல் வளங்களை சூறையாடிச் செல்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாம் எதிர்த்தரப்பில் இருந்தாலும் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்கானதட்டுப்பாடு உள்ளடங்கலாக நாட்டின் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிக்கான தீர்வுகள் தொடர்பாகக் கூட்டாக ஆராய்ந்து வருகின்றோம். அதன்மூலம் கண்டறியப்படுகின்ற தீர்வுகளை அடுத்தவாரம் வெளியிடுவோம். - என்றார்.

## குழப்புகிற தா, ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் நேரம் எடுத்து, விசாரணை செய்து, முடிவை அறிவிப்பது ஒரு புறமிருக்க, அதற்கு முன்னரே, தென்னிலங்கையில் சில - பல முந்திரிகொட்டை பிரகஸ்பதிகள், தமிழர் தரப்பு மீது(ம்) முத்திரை குத்தாது, என்று யாரேனும் உறுதியாக கூற முடியுமா? எப்படி ஏழை சொல் அம்பலம் ஏறாதோ, அப்படித் தானே, தமிழர் தரப்பு நியாயங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது?

இந்த பின்னணிகள் மற்றும் எதிர்கால சாத்தியங்கள் குறித்து, ஆராய்ந்து அறிந்து, தமிழ் சமூக – அரசியல் தலைமைகள், தங்கள் மக்களை, அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்கு சரியான வகையில் அறிவுறுத்தல்களை முன்னதாகவே வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், குழந்தையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிட்டு, சரியான நேரத்தில் தாங்கள் மட்டும், தங்கள் குடும்பத்தினருடன இந்தியாவிற்கோ, அல்லது மேலை நாடுகளுக்கோ சென்று அங்கு பாதுகாப்பாக இருக்கும் பழக்கத்தை இப்போதாவது விடவேண்டும்.

இப்போதைக்கு, இது போன்ற எச்சரிக்கை, கேலியாகவே தோன்றும். ஆனால், நாளை, தென்னிலங்கை அரசியல் வன்முறை பாதையில் செல்லுமேயானால், அதிலிருந்து தங்கள் மக்களை காப்பாற்றுவது, தமிழ் தலைமைகளின் தலையாயா கடமை. அவ்வாறு நிகழாமல், அவர்களை காப்பாற்றுவது, அதனை விட மிக முக்கியமான கடமை!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சமூக விழுமியங்கள்

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. விழுமியங்கள் மனித வாழ்க்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுக் கோப்பான வாழ்க்கை வாழ்வதற்கு வித்திடுகின்றன. அவ்வாறான விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தொடர்ச்சியே விழுமியத்தை தொடர்புடைய ஏனைய கருத்துக்களான நம்பிக்கை, கருத்து, எண்ணம் என்பவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது. இத்தகைய சூழலில் விழுமியம் என்பது மனிதன் எதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றானோ அதைக் குறிக்கின்றது எனலாம்.

சமூக விழுமியங்களின் முக்கியத்துவம் என்னவென்றால் அவை மனித உறவுகளை வலுப்படுத்துகின்றன. அதனால்தான் மரியாதை, நட்பு, நீதி, சுதந்திரம், அன்பு, நேர்மை, சகிப்புத்தன்மை மற்றும் பிற மதிப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவை சிறந்த எதிர்காலத்தை தேடும் நோக்கோடு விளங்குகின்றன. சமூக விழுமியங்கள் ஆழ்நிலை என்று கருதப்படுகின்றன. ஏனெனில் அவை சிறந்த வாழ்க்கை நிலைமைகளை அடைவதற்காக மக்களின் தனிப்பட்ட அல்லது சமூக நடவடிக்கைகளில் தலையிடுகின்றன. எந்தவொரு சமூக மதிப்பும் சுயாதீனமாக செயற்படாது. ஏனெனில் அவை ஒன்றாக மதிப்புக்களின் சங்கிலியை உருவாக்குகின்றன. ஆவை மீண்டும் மீண்டும் செயற்படும் போது நேர்மறையான முடிவுகளை உருவாக்குகின்றன.


திருமதி மிலாசினி றோகேசன்.
(கலாசார உத்தியோகத்தர்,
சங்கானை பிரதேச செயலகம்

விழுமியங்கள் இரு வகையாகக் கருதப்படலாம்.

1. தனி மனித விழுமியங்கள்
2. பண்பாட்டு விழுமியங்கள்

தனி மனித விழுமியங்கள் தனி மனிதனுடைய வாழ்வை நெறிப்படுத்தி ஒழுங்கமைப்பதை நோக்கமாக கொண்டவை. இவற்றில் சமய,புராண, இதிகாசகதைகளின் அறநெறிக் கொள்கைகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்த விழுமியங்கள் சிறப்பாக தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்களாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

ஒரு சமுதாயத்தில் விழுமியங்கள் கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றன. தமிழர் மத்தியில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் போன்ற ஆக்கங்களிலும் தமிழர் சமுதாயத்தில் நிலவும் விழுமியங்களை காணலாம். சமூக விழுமியங்களாக கருதக்கூடிய பல்வேறு மதிப்புக்கள் உண்மையாக இருப்பினும் முக்கிய சமூக விழுமியங்கள் மற்றும் அவற்றின் எடுத்துக்காட்டுக்கள் என்ன என்பதை தெளிவுபடுத்துவது முக்கியம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பதிகமும் பொழிப்பும்



நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.

பொருள் :

உன் இணையபடிகளைத் தவிர, வேறொன்றையும் தன் கருத்தில் கொள்ளாத, மார்க்கண்டேயன் எனும் தவப்புதல்வனானவன் காலன் வரும் வேளையில், 'ஐயனே! அப்பனே!' என்று உன்னை அழைக்க – என் அடியவனின் உயிரை எடுக்க, உனக்கு என்ன துணிச்சல், அவனைத் தொடாதே, அவன் உயிரில் 'கை' வைக்காதே என்று உன் தாமரைப் பாதத்தால், எட்டி அழிக்கும் வகையில் வீரத்தோடு, உதைத்தவனே! காலகாலனே! அப்படிப்பட்ட உன் பொன்னடியை மனதில் நிறுத்தி, பாடிப்பரவி, கண்ணீர்மல்கி, மாலைகளாயும், சரங்களாயும், உதிரிப் பூக்களாயும் குடலைகளிலும் கூடைகளிலும், தட்டுக்களிலும் என எடுத்து வருவோரையும் உன் அபிஷேக ஆராதனைகளுக்கு என குடம் குடமாய் நீரைச் சுமந்தும், உன்னையே அனைத்து உயிர்களிலும் கண்டு, அவர்கள் தாகம் தீர்க்கவெனத், தண்ணீர்கொடுக்கும் அன்பர்களான, உனது உத்தமமான அந்த அடியார்களின் இடர்களையும், கஷ்டங்களையும் களைந்து, நிம்மதியான இன்பமான வாழ்க்கையை அருள்வாயப்பா! எம் இறைவா! திருநெடுங்களம் மேவியிருக்கும் நிமலா! எம் அப்பனே!

திருச்சிற்றம்பலம்

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து)**



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை


தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

வடிவோடி லங்கு இருமாதி லங்க
வலமாக கொஞ்சு - மழகோடு
வரமேவ ழங்க மணியாறெ ழுந்து
ஒலிவார வெள்ளி - மயிலேறி
கொடியேறி வந்து விடிவேக னிந்து
குடியோடி லங்க - அருளாயோ?
குருவாகி வந்து செவிமீதி லன்று
குறைதீர நன்கு - உரைதேவே
படியேறி வந்து துயரேவி ளம்பி
பணிவோரி டைஞ்சல் - களைவேலா
பதநாளு வந்து பணியாத வென்னை
பதமோது என்று - பணியாயோ?
அடிநாளி ணைந்த பிழையேம றைந்து
அடிவாழு மின்பை - அருளாயோ?
அடியாரின் நெஞ்சு குடியேறி நின்று
அருள்வாரு நல்லை - பெருமானே!

– கவிஞர் இராசையா குகதாசன் –

வாரம் ஓர் ஆசனம்

# விபரீதகரணிக்கிரியா



### செய்முறை

படி 1. கைகளை தலைக்கு மேலாக நீட்டியவாறு மல்லாந்து படுக்கவும். கால்கள் இரண்டும் இணைந்திருக்கட்டும். கைகள் இரண்டும் காதுகளுடன் அணைத்தவாறு இணைந்திருக்கட்டும்.

படி 2.பின் கைகளை பக்கவாட்டில் வைத்தவாறு முழங்காலை மடக்காது சுவாசத்தை இழுத்த படி கால்களை 90 பாகை அளவுக்கு உயர்த்தவும். சுவாசத்தை வெளிவிட்டவாறு கால்களை தலைக்கு பின்நோக்கி கொண்டுவரவும்.

படி 3. புட்டத்தை உயர்த்தி உள்ளங்கைகளை இடுப்புக்கு ஆதாரமாக வைத்து உடலைக் கை மூட்டுக்கள் தாங்குமாறு முழங்கைகள் தரையில் ஊன்றியவாறு இருக்கவும். அதாவது இடுப்புப் பகுதியை, உடலை 45 பகையில் வைத்துக் கொண்டு கால்களை 90 பாகை அளவுக்கு உயர்த்த வேண்டும். 1 நிமிடம் வரையில் இயல்பான சுவாசம் கொள்க. இது சர்வாங்காசனத்தின் அரைநிலையைக் குறிக்கும்.

படி 4. மெதுவாக மூச்சை வெளிவிட்டவாறு ஆரம்ப நிலைக்கு வந்து உடலைத் தளர்த்திக் கொள்ளவும்.

### பலன்கள்

அடி வயிற்றுப் பகுதி உள்ளுறுப்புக்களுக்கு நல்லது. இரத்தோட்டம் சீராக இடம்பெறும். இரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. சுவாசப்பை, இருதயத் தசைகள் பலம்பெறும். சுவாசம், இருதயத்துடிப்பு. இரத்தோட்டம் சீராக நடைபெறும். தலைப்பகுதிக்கு அதிக இரத்தம் கிடைக்கிறது. மேலும் மூக்கடைப்பு, பீனிசவாசம், மார்புச் சளி, இருமல், என்புருக்கி நோய், நரம்புத்தளர்ச்சி, அஸ்மா, குடலிறக்கம், குடல்வளரி, நீரிழிவு போன்ற பல உபாதைகள் நீங்கும். குடல், வாயுக்கோளாறு, முதுகுவலி, கால் பலவீனம், கால்விறைப்புத் தன்மை, மூட்டுவலி, கீல்வாதம் நீங்கும். பெண்களுக்கு கருப்பை, சூலகம் மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

# 22 ஆவது புதிய அரசமைப்புத் திருத்தம் மக்களை ஏமாற்றும் கண்கட்டு வித்தை!

## லக்ஷ்மன் கிரியெல்ல சாட்டை



22 ஆம் திருத்தம் மக்களை ஏமாற்றும் கண்கட்டி வித்தை. இதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவராமல் துறைசார் மேற்பார்வை குழுக்களை அமைப்பதில் எந்தப் பயனும் இல்லை என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பிரதமரின் 6 ஆம் திகதிய விசேட உரையின்போது , துறைசார் மேற்பார்வை குழுக்களை அமைத்து அதன் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்ததற்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு மிகவும் அவசியமாகும். என்றாலும் 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவராமல் துறைசார் மேற்பார்வை குழுக்களை அமைப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை.

அதேபோன்று அரச நிறுவனங்களை அரசியல் தலையீடுகளில் இருந்து மீட்கவேண்டும் என பிரதமர் தெரிவித்திருந்தார்.

19 ஆம் திருத்தம் மூலம் அதனையே நாங்கள் செய்தோம். ஆனால் 20 ஆம் திருத்தத்தை கொண்டு வந்து அதனை முற்றாக இல்லாமலாக்கி இருக்கின்றது.

ஏனெனில் நிறுவனங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அப்படியானால் அரச நிறுவனங்களை அரசியல் தலையீடுகளில் இருந்து எவ்வாறு பாதுகாக்க முடியும். அதனால் பிரதமர் தெரிவிப்பதுபோல் குழு அமைத்து அரச நிறுவனங்களைப் பாதுகாக்க முடியாது.

அத்துடன் பிரதமர் அமைக்கும் குழு முறைமை அரசமைப்பில் இல்லை. இந்தக் குழுக்கள் நாங்கள் நட்பு ரீதியாக அமைப்பதாகும். அதற்கு எந்த அதிகாரமும் இல்லை. நாங்கள் கலந்துரையாடி தீர்மானம் ஒன்று எடுத்தாலும் அதனை ஜனாதிபதிக்கு செயல்படுத்தாமல் இருக்க முடியும். அதனால் ஆரம்பமாக நீங்கள் கொண்டு வந்த 19ஐ கொண்டுவாருங்கள்.

மேலும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கொண்டு வந்திருக்கும் 22 ஆம் திருத்தம், 19 ஆம் திருத்தம் அல்ல. ஆரம்பத்தில் பிரதமர் 19 ஆம் திருத்தத்துக்கு சமமான திருத்த சட்டமூலத்தையே அனைவருக்கும் காட்டியிருந்தார்.

ஆனால் பின்னர் அதில் திருத்தம் மேற்கொண்டு, 22ஆம் திருத்தம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் அதிகரித்திருக்கின்றது.

எந்த வேளையும் பிரதமராகிய உங்களையும் நீக்கலாம். இதுவும் ஒரு கண்கட்டி வித்தை. அதனால் குழு முறைமையைக் கொண்டுவருவதாக இருந்தால் அரசமைப்புக்கு உட்பட டொனமூர் முறையை கொண்டு வாருங்கள்.

அதற்கு நாங்கள் ஆதரவு. அரசமைப்புக்கு டொனமூர் முறையை கொண்டுவந்து இந்த குழுக்களை அமைத்தாலே சரியாக செயற்படமுடியும். - என்றார்.

## பொலிஸாரின் கைகளில் விளையாட்டு பொருளாக மாறியுள்ள கண்ணீர்புகை!

### பொதுமக்கள் கடும் விசனம்

இலங்கையில் அரசாங்கத்துக்கெதிராக நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதன்போது போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி மக்களை போராட்ட பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், புதன்கிழமை கொழும்பில் அரசாங்கத்துக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது பொலிஸார் பொது மக்கள் ஒன்றுகூடாத சில பொது வீதிகளில், பொது போக்குவரத்து அமைதியாக இடம்பெறும் பகுதிகளில் தேவையற்ற வகையில்,கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை தொடர்பில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான காணொலிகள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளதுடன், பொது மக்கள் பொலிஸாருக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

## தாதிய உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்பு

வட மாகாணத்தில் கடமையாற்றும் தாதியர்களின் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வட மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரனுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வட மாகாணத்தில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றத்தை மேற்கொள்வதற்காக வட மாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுத்த நிலையில், அந்த விடயம் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக சுகாதார உத்தியோகத்தர்களின் சேவை அத்தியாவசிய சேவையாகக் கருதப்படும் நிலையில், மேற்படி இடமாற்றத்தை நிறுத்துமாறு வடமாகாண தாதிய சங்கம் ஆளுநரை கோரியதன் அடிப்படையில் இடமாற்றம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

## சமூக ......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

*** மரியாதை**

மரியாதை என்பது மக்களால் மிகவும் பாராட்டப்பட்ட ஒரு மதிப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக உறவுகளை மதிக்க வேண்டும். எங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனிநபர்களும் முக்கியமானவர்கள் என்பதனை அங்கீகரிப்பதற்கான ஒரு வழியாகும். எடுத்துக்காட்டாக ஒரு கூட்டாளியின் கருத்தை கவனமாக கேட்பது கூட மரியாதைக்கு ஒத்ததாகும்.

காரணம் எதுவானாலும் ஒருவரை வெறுக்கும் போது ஒருவர் மகிழ்ச்சியை இழக்கின்றான். அதேசமயம் ஒருவன் யாரை அதிகம் நேசிக்கின்றானோ அவன் நன்றாக இருந்தால் அவன் மகிழ்ச்சி அடைகின்றான். இதனால் மகிழ்ச்சி அடைவதுடன் கவலை கொள்வதும் அவனிடமே உள்ளது என்று தெரிந்து கொள்ளலாம். மகிழ்ச்சியை வாழ்க்கையில் தேடி அலைகின்றவர்கள் அது அவர்களிடமே இருக்கின்றது என்பதை அறியாமல் எங்கெங்கோ தேடி முடிவில் சோர்வுற்றும் போகின்றார்கள்.

ஒருவருடைய மகிழ்ச்சியை ஒரு போதும் மற்றவர்களால் அழிக்கமுடியாது. ஆனால் தன்னுடைய மகிழ்ச்சியைத் தானே அழித்துக் கொள்ள முடியும். வருத்தப்படுவதனால் எந்தப் பிரச்சினையும் தீர்ந்து விடப்போவதில்லை. கவலைப்படுவதனாலும், கோபப்படுவதனாலும் மேலும் பிரச்சினைகள் சிக்கலாகின்றன. அனேகர் துன்பம் அனுபவிப்பதில் கூட மகிழ்ச்சியடைகின்றார்கள். ஏதோவொரு காரியத்தை எடுத்துப் போட்டு கொண்டு அதில் எப்படியும் வெற்றி பெறுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு ஈடுபடுவார்கள். அதற்காக பல கஷ்டங்களையும் அனுபவிப்பார்கள்.

சிலர் முதலில் குற்றம் புரிந்து வருந்துவார்கள். ஆனால் அதே குற்றங்களை திருப்பி திருப்பி செய்யும் போது அதில் நிம்மதி அடைந்து மகிழ்கின்றார்கள். இவை எல்லாம் உண்மை மகிழ்ச்சியாகாது. மகிழ்ச்சிக்காகச் செய்யும் காரியங்களை செய்கின்றவன் குற்றவுணர்வுகளிலிருந்து விடுபட்டவனாக முதலில் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

தாழ்வு மனப்பாங்கு கொண்டிருந்தாலும் மகிழ்ச்சி அழிந்து விடும். வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களைக் கண்டு நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த நம்பிக்கையே எப்போதும் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடும்.

மகிழ்ச்சி என்பது மகத்தான சக்தியின் இருப்பிடம். மகிழ்ச்சியின் மூலம் பெறுகின்ற சக்திக்கு இணையான சக்தி உலகத்தில் வேறு இல்லை.

## ஏற்கனவே நாணய நிதியத்தின் ஆலோசனைகளை பின்பற்றியமையே தற்போதைய நிலைக்கு காரணம்

### டியூ குணசேகர சாடல்

எமது நாடு ஏற்கனவே கடன்பெறுகையைப் பொறுத்தமட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகச் செயற்பட்டமையாலேயே இப்போது கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

அவ்வாறிருக்கையில் மீண்டும் சர்வதேச நிதியத்தை நாடுமாறு சிலர் ஏன் கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை.

இப்போது இந்தியா, சீனா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளிடம் மாத்திரமே நாம் உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டியூ. குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாக நாம் பல மாதங்களுக்கு முன்னரேயே ஜனாதிபதி உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசாங்கத்திடமும் தனிப்பட்ட முறையில் எடுத்துரைத்ததுடன், எச்சரிக்கைசெய்தோம். இருப்பினும் அதற்கு அரசாங்கம் செவிசாய்க்காததன் காரணமாக கடந்த மார்ச் மாதம் இந்த நெருக்கடி மிகவும் பூதாகரமாக வெடித்துள்ளது.

இதன் விளைவாக எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெருந்தொகையினராக இருக்கக்கூடிய அன்றாடக் கூலித்தொழிலாளர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவேளை உணவை உட்கொள்ளமுடியாத நிலையேற்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், இப்போது ஒருவேளை உணவைக் கூட உட்கொள்ளமுடியாத நிலையேற்பட்டிருக்கின்றது என்பதே உண்மையாகும். எனவே இந்த நெருக்கடியை தற்போதைய அரசாங்கத்தால் தனித்துநின்று சமாளிக்கமுடியாது.

ஜனாதிபதியால் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில்விக்கிரமசிங்க இன்னமும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான தனது செயற்திட்டத்தை முன்வைக்கவில்லை.

இந்தியா தமது நாட்டிற்குத் தேவையான எரிபொருளை ரஷ்யாவிடமிருந்தே பெறுகின்றது. ஆனால் இலங்கையால் ரஷ்யாவுடன் பேச்சு நடத்தி, அவசியமான எரிபொருளைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

தற்போது தட்டுப்பாடு நிலவக்கூடிய எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை நாட்டுக்குக் கொண்டுவந்தால், நாடு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

அதேவேளை ஏற்கனவே கடன்பெறுகையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகச் செயற்பட்டமையாலேயே இப்போது கடன்களை மீளச்செலுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது.

அவ்வாறிருக்கையில் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு சிலர் ஏன் கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை.

இப்போது இந்தியா, சீனா, ஜப்பான் ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளிடம் மாத்திரமே உதவிகளைப் பெறமுடியும்.

அதுமாத்திரமன்றி குறிப்பாக அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில் நடைபெற்ற ஜி - 7 மாநாட்டின்போதும் சீனாவின் தலைமையில் நடைபெற்ற மற்றொரு மாநாட்டின் போதும் இலங்கையின் பொருளாதார நிலைவரம் மற்றும் இலங்கைக்கு உதவக்கூடிய வழிமுறைகள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அதுமாத்திரமன்றி இலங்கை போன்ற கடன் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நாடுகளுக்கு உதவுவதற்கென 'பொன்ட் பன்ட்' என்ற நிதியமும் உருவாக்கப்பட்டுள்ளது. அதனூடாக எமது நாட்டுக்கு அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர் மகளிர் பிரிவு ஹாலெப், ரிபாகினா அரையிறுதிக்கு முன்னேறினர்

விம்பிள்டன் தொடரின் டென்னிஸ் போட்டித்தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டமொன்றில் ருமேனியாவின் சிமோனா ஹாலெப், அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவாவை எதிர்கொண்டிருந்தார். இந்தப் போட்டியில் ஹாலெப் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் கசகஸ்தான் வீராங்கனை எலினா ரிபாகினா, ஆஸ்திரேலிய வீராங்கனை அஜிலா டாம்ஜனோவிக்குடன் மோதினார். அந்தப் போட்டியில் ரிபாகினா 4-6, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றிருக்கிறார்.



## விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் காலிறுதி ரபேல் நடால், கிர்கியோஸ் வெற்றி!



லண்டனில்நடைபெற்றுவரும்விம்பிள்டன்டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவுக் காலிறுதிச் சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், அமெரிக்காவின் டெய்லர் பிட்ஸை எதிர் கொண்டிருந்தார். ஆரம்பம் முதலே இருவரும் விட்டுக் கொடுக்காது விளையாடினர். முதல் மற்றும் மூன்றாவது செட்களை டெய்லரும், இரண்டாவது மற்றும் நான்காவது செட்களை நடாலும் கைப்பற்றினர்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டை நடால் போராடி வென்றார். 3-6, 7-5, 3-6, 7-5, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற நடால் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவின் நிக் கிர்கியோஸ், சிலியின் காரினுடன் மோதியிருந்தார். இதில் 6-4, 6-3, 7-6 என்ற நேர் செட்களில் கிர்கியோஸ் வென்று அரையிறுதிச்சுற்றுக்குள் நுழைந்தார். கிர்கியோஸ் இன்று நடைபெறவுள்ள அரையிறுதியில் ரபேல் நடாலை எதிர்கொள்ளவிருக்கிறார்.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடர் தவான் தலைமையிலான இந்திய அணி அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி, 5 ரி-20 போட்டிகளில் விளையாடவிருக்கிறது. இரு அணிகளும் மோதும் முதலாவது ஒருநாள் போட்டி ஜூலை 22 ஆம் திகதி தொடங்கவிருக்கிறது.

இந்தச்சுற்றுப்பயணத்துக்கானஒருநாள்தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரோகித் சர்மா, விராட் கோலி, பும்ரா, ரிஷப் பண்ட், மொகமட் ஷமி ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவானும், துணைத் தலைவராக ரவீந்திர ஜடேஜாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாள் தொடருக்கான இந்திய அணியின் விவரம்: ஷிகர் தவான், ரவீந்திர ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட், ஷுப்மன் கில், தீபக் ஹூடா, சூர்யகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் அய்யர், இஷான் கிஷான், சஞ்சு சாம்சன், ஷர்துல் தாக்குர், யுஸ்வேந்திர சஹல், அக்சர் படேல், அவேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, மொகமட் சிராஜ், அர்ஷ்தீப் சிங்.




## இந்திய ரி-20 அணிக்கு எச்சரிக்கை விடுத்தார் இங்கிலாந்து அணித்தலைவர் ஜோஸ் பட்லர்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயானடெஸ்ட்தொடர்முடிவடைந்த நிலையில் ரி-20 மற்றும் ஒருநாள் தொடர்கள் நடைபெறவுள்ளன. ரி-20 போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

இந்தநிலையில்இந்தியரி-20அணிக்கு இங்கிலாந்து அணியின் தலைவரான ஜோஸ் பட்லர் எச்சரிக்கை விடுத்துள்ளார். எட்ஜ்பாஸ்டனில் இங்கிலாந்து அணியின் வெற்றி நம்பமுடியாத வகையில் இருந்தது. இந்த டெஸ்ட் அணியில் இருந்து சிறப்பான ஆட்ட நுணுக்கங்களைப் பெற்று, இங்கிலாந்து அணியின் வெற்றிப் பயணம் தொடரும், என்று அவர் தெரிவித்திருக்கிறார். இங்கிலாந்து அணியின் ஒரு நாள் மற்றும்ரி-20 அணியின்புதியதலைவராக அண்மையில் ஜோஸ் பட்லர் நியமிக்கப்பட்டார். நெதர்லாந்து அணிக்கு எதிராக பட்லர் தலைமையில் ஆடிய இங்கிலாந்து அணி ஒருநாள் போட்டியில் 498 ஓட்டங்களை எடுத்து வரலாற்றுச் சாதனை படைத்தது. அந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி வீரர்கள் 3 பேர் சதம் விளாசியமை குறிப்பிடத்தக்கது.



இந்திய அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு முன்பு இந்திய அணிக்கு எச்சரிக்கை விடுத்தது இங்கிலாந்து அணி. அது போலவே டெஸ்ட் போட்டியை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் சாதனை படைத்தார் ஜோ ரூட்!



இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியிருந்தன.

இந்தத் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது. கொரோனாவால் ஒத்திவைக்கப்பட்ட ஐந்தாவதுவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி அபாரமாக விளையாடி வெற்றிபெற்றது. இதற்கு முன்பு நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் வென்றிருந்தது.

5 போட்டிகள் கொண்ட இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் ஜோரூட் 737 ஓட்டங்களை எடுத்துள்ளார். இந்தத் தொடரில் ஜோரூட் 4 சதங்களை விளாசியுள்ளார். ஐந்தாவது போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் சதம் அடித்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஜோரூட் தனது 28 ஆவது சதத்தைப் பதிவு செய்தார். ஸ்டீவ் ஸ்மித் மற்றும் விராட் கோலி ஆகியோர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 27 சதங்களை அடித்துள்ளனர். கோலி தனது 27 ஆவது சதத்தை பெற்ற போது ரூட் 16 சதங்களை மட்டுமே அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரின்போது ஜோரூட் புதியசாதனைஒன்றையும்படைத்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணிக்கு எதிராக ஸ்மித் (8), ரிக்கி பொண்டிங் (8), ரிச்சர்ட்ஸ்(8) மற்றும் கரி சோபர்ஸ் (8) ஆகியோரின் அதிக சதங்களைப் பெற்ற சாதனையை ஐந்தாவது போட்டியில் சதமடித்த ஜோரூட் தகர்த்துள்ளார். இவர் இப்போது இந்தியாவுக்கு எதிராக 9 டெஸ்ட் சதங்களை எடுத்திருக்கிறார். கடந்த ஆண்டில் ஜோ ரூட் 11 சதங்கள் உட்பட 2,500 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளதோடு, டெஸ்ட் போட்டிகளில் 10,000 ஓட்டங்களையும் அவர் கடந்துள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-58

### மனோகணேசனின் அறிவுரையும் மாவை சேனாதிராஜாவின் நிலைப்பாடும்

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆஸ்திரேலியாவின் 'ஃபோக்கஸ் தமிழ்' என்ற ஊடகத்துக்கு 04, ஜுலை 2022 அன்று செவ்வி ஒன்று தந்திருந்தார்.

அதில் தனக்கும் கூட்டமைப்பு அங்கத்தினர்களுக்கும், எதிர்க்கட்சிகளுடன் தங்களது பிரதிநிதிகள் நடத்தும் பேச்சுக்களின் விவரங்கள் தெரிந்தேயுள்ளன என்றார் அவர். தாங்கள் மற்றத் தமிழ்ப் பரப்புகளோடு சேர்ந்து, நாட்டின் பன்மைதுவத்தையும், சமஷ்டி முறையில் அதிகாரக் கட்டமைப்புகள் அமைய வேண்டும் என்ற ஒழுங்கையும் வற்புறுத்துகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அவர்களது அணுகுமுறையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், அவர்களுக்கு அந்தப் பிரதேசங்களில் தனித்துவமாகத் தங்களது தன்னிறைவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் மீளப் பெறமுடியாத விதத்தில் உள்ளடக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பது தங்களின் நீண்ட காலக் கொள்கையும் கோரிக்கையும் என்றார். அவைதான் தொடர்ந்து வற்புறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.



மேலும் காலிமுகத்திடல் போராளிகள் இனப்பிரச்சினை பற்றிப் பேசினாலும், அதனை ஒட்டி அவர்களது கொள்கை இன்னும் முழுமை அடையவில்லை எனவும், கோட்டாபய அரசை நீக்குவதில் தங்களை இணைந்து செயல்படும்படி எதிர்க்கட்சிகள் அழைப்புகள் தருகின்றன என்றும் கூறினார்.

கோட்டாபய பதவி விலக வேண்டும் என்பது கட்சியினதும் கூட்டமைப்பினதும் நிலைப்பாடு. அதனால் தங்களது பிரதிநிதிகள் அவற்றுக்கான முயற்சிகளில் பங்கேற்கிறார்கள். ஓர் இடைக்கால தேசிய அரசு அமைக்கப்படுமானால் அதில் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கும் பொருளாதார நிவர்த்திக்கும் இணைந்து பயணிக்க கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அதனை மற்றைய தமிழ்ப் பரப்புகள், புலம்பெயர் அமைப்புக்களுடன் கலந்தாலோசித்து, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை நோக்கிப் போகக்கூடிய முன்னெடுப்புக்கான சந்தர்ப்பமாக இதைப் பார்க்கின்றோம் என்றார்.

செவ்வியின் வார்த்தைகள், தொனிகள், கேள்விகளுக்கான விளக்கங்களில் இது நல்லாட்சி அரசுக்கு தந்த அனுசரணையில் இருந்து இடைக்கால அரசில் பங்கு பற்றும் நோக்கமும் இருப்பதாக – இருந்ததாக – பட்டது. இடைக்கால தேசிய அரசை அமைக்கும் முன், அந்த அரசின் பங்காளிக் கட்சிகளிடமிருந்தும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களிடமிருந்தும் சமஷ்டிக் கட்டமைப்புக்கான உத்தரவாதம் பெறப்படுமா அல்லது அதை நோக்கிப் போகக்கூடிய சந்தர்ப்பங்களுக்காக இணைந்து செயல்படுவது என்ற நோக்கமா என்பதை சேனாதிராஜா விளக்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் அது ஓர் இடைக்கால தேசிய அரசு, எல்லாக் கட்சிகளாலும் சேர்ந்து அமைக்கப்படும் என்றார்.

### தமிழ் தரப்புக்களின் இக்கட்டுகள்

ஆக, முதலில் தமிழர் அபிலாஷைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்ற உறுதி பெறப்பட வேண்டுமா அல்லது இடைக்காலத் தேசிய அரசில் முதலில் இணைந்து, அங்கு பேசி அதைப் பெற முயல்வதா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

சேனாதிராஜா விளங்கப்படுத்திய மாதிரி, அல்லது விளக்குவதற்கு சிரமப்பட்ட மாதிரி, 'முட்டை முதல் வருமா? அல்லது கோழி முதல் வருமா?' என்பதற்கு சிங்கள பேரினவாதத்தின் பின்னணிகளில் இருந்து எதுவும் சொல்வதற்கில்லை.

காலம் காலமாக ஆறு கடக்க அவர்கள் கைப்பிடிப்பதுதான் நடந்தது. அவைதான் கடைசியில் விடுதலைப் போராளிகளையும் பிரபாகரனையும் உருவாக்கின. இன்று போராளிகளின் பலம் இல்லாத போது, தமிழ் மக்கள் தங்களது (சிங்களவர்களது) கையைப் பிடித்துத்தான் ஏதாவது பெற்றுக் கொள்ள வேண்டும், அது



தான் நிலைமை என்ற எண்ணங்கள் பெரும்பான்மை கட்சிகளிடம் உண்டு. இனவாதத்தில் அவர்கள் இதுவரை நீதி, நியாயம், அனுதாபம் பார்த்தவர்கள் அல்லர். அதனை மனோ கணேசன் அன்றைய கூட்டத்தில் போட்டுடைத்துப் பேசிய போது 'கோட்டா கோ கம' போராளிகள் இல்லையென்று மறுக்கவில்லை. ஏற்றுக் கொள்ளாமலும் இருந்தார்கள். மற்ற சிங்களக் கட்சிகள் மௌனமாகவே இருந்தன.

இதே இக்கட்டுகளில் தானோ என்னவோ முன்னர் ரணிலுக்கு ஆதரவாகப் பேசிய நீதியரசர் விக்னேஸ்வரன் எதிரணியில் சஜித் பிரேமதாஸ கூட்டிய சர்வ கட்சிக் கூட்டத்தில் பங்கு பற்றி உள்ளார். அவற்றின் நோக்கங்கள் தெளிவுபடுத்தப் படவில்லை.

சேனாதிராசாவின் ஊடக செவ்விக்குப் பின்னர்தான் மனோ கணேசனும், சுமந்திரனும் 'கோட்டா கோ கம' போராளிகளுடன் நடத்திய சந்திப்பில் தரப்பட்ட 10 பக்க ஆவணத்தின் பொழிப்பு வெளியாகியது.

அதில் இறுதி இலக்கை அடைவதற்கு ரணிலும் கோட்டாவும் வெளியேறிய பின், பொருளாதார, சமூக, அரசியல் இலக்குக்கும் மற்றும் போராட்டத்தின் நோக்கங்களுக்கும் ஏற்றவாறு இடைக்கால நிர்வாகம் அமைய வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. மக்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்பு ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும்வரை தற்போதுள்ள அரசமைப்பில் செய்யப்படக் கூடிய ஜனநாயகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், மக்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்பு வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பன முதன்மையான நோக்கம் எனவும் அது 12 மாதங்களுக்குள் நடக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆக, கோட்டாபய அரசை நீக்குவது என்ற தீர்மானத்தைத் தவிர மற்றபடியான பொருளாதார, சமூக, அரசியல் இலக்குகளுக்கு எதுவித வரையறைகளும் குறிப்பிடப்படாமல் தேசிய அரசு ஒன்றை நிறுவி, அந்த அரசுதான் அவற்றை – தேசத்தை – கட்டி எழுப்புவதற்கான முடிவுகளை எடுக்கும், இந்த இடைக்கால அரசில் பங்கு பற்றி கூட்டமைப்பு தங்களது கொள்கைகளையும் கோரிக்கைகளையும் முன் வைக்லாம் என்ற சாரம்தான் உள்ளது.

அந்த இடைக்கால அரசில் சஜித் பிரேமதாஸவின் கட்சியைத் தவிர மேலும் ஜே.வி.பி., சோலிஸ் முன்னணி, சம்பிக்க, மைத்திரிபால சிறிசேனாவின் அங்கத்தினர்கள் எனப் பல தரப்பினரும் பங்குபற்றுவர், அவர்கள் எல்லோரினதும் பெரும்பான்மையில்தான் கூட்டமைப்பின் கோரிக்கை முன்னேற வேண்டி இருக்கும்.

1956 இல் செல்வநாயகம் பண்டாரநாயக்காவுடன் பேசினார். பின் டட்லி சேனநாயக்காவுடன் பேச்சு நடந்தது. அதன் பின் எத்தனையோ சர்வ கட்சி மாநாடுகள், பின்னர் இந்திய – இலங்கை ஒப்பந்தம், பிரேமதாஸவின் 'My Boys' அணுகுமுறை, சந்திரிகாவின் சமாதான முன்னெடுப்புகள், அவற்றுக்குக் குறுக்கே நின்ற மஹிந்த, விமல் வீரவன்ஸ, சம்பிக்க, கமன்பில்ல போன்றோரின் நடவடிக்கைகள், சந்திரிக்காவின் சமாதான முயற்சிகள், ரணிலின் உள்ளக சுயநிர்ணயத் தீர்வுக்கான இணக்கம், அதன் பின்னர் வெளிப்படுத்தபட்ட 'ஒரே நாடு; ஒரே சட்டத்தின்' கோட்டாபய – இவர்கள் எல்லோரையும் இவர்களது நிலைப்பாடுகளையும் மாவை சேனாதிராஜா, நீதியரசர் விக்னேஸ்வரன் போன்றோர் அறியாதவர்கள் அல்லர். அதன் அனுபவங்களில் இடைக்கால அரசு தரக்கூடிய இனப் பிரச்சனைக்கான தீர்வைக் கணக்கெடுக்க வேண்டும். இடைக்கால அரசும் முடிவுகளை ஜனநாயகரீதியில் பெரும்பான்மையில்தான் எடுக்கும். இப்பொழுதும் தங்களுக்குக் கிடைத்த 'கேக்'கில் நியாயமானொரு பங்கை மற்றவருக்குத் தர முடியாது என்ற எண்ணங்களில் மாற்றம் இல்லாமல் பேரினவாதமே தாண்டவமாடுமானால் என்ன செய்ய முடியும்?

(வளரும்)